# பத்திரிகை அறிவித்தல்

## தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (அடி 2013=100) 2015 நவம்பர்

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் புதிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணாக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2015 ஒக்டோபர் மாதம் தொடக்கம் உரிய கலண்டர் மாதம் நிறைவடைந்து 21 நாட்களின் பின்னர் வெளியீடு செய்யப்படுகின்றது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2015 நவம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை 112.0 என வெளியீடு செய்துள்ளது. நவம்பர் மாதத்தின் சுட்டெண்ணை ஒக்டோபர் மாதத்தின் சுட்டெண்ணுடன் (109.2) ஒப்பீடு செய்யும் போது 2.8 அளவான சுட்டெண் அதிகரிப்பையும் 2.6 என்ற வீதாசார அதிகரிப்பையும் பதிவு செய்துள்ளது. இதற்கு உணவுத் தொகுதியில் 2.1% அதிகரிப்பு மற்றும் உணவல்லாத் தொகுதியில் 0.5% அதிகரிப்பும் தாக்கம் செலுத்தியுள்ளது.

உணவுத் தொகுதியின் அதிகரிப்புக்காக காய்கறிகள், பச்சை மிளகாய், அரிசி, பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு, தேங்காய், எலுமிச்சை, சின்ன வெங்காயம், மீன் மற்றும் செத்தல் மிளகாய் போன்ற உணவுப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு தாக்கம் செலுத்தியுள்ளது. அவ்வாறாயினும் மாம்பழம், பப்பாசி, கோழி இறைச்சி, முட்டை, நெத்தலிக் கருவாடு மற்றும் வாழைப்பழம் ஆகிய உணவுப் பொருட்களின் விலைகளில் சிறிய வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடும்போது 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான உணவல்லாப் பொருட் தொகுதியில் 0.5% அதிகரிப்பைக் காணக் கூடியதாகவுள்ளது. இதற்காகப் "போக்குவரத்து" மற்றும் "பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள்" ஆகிய தொகுதிகளுக்குரிய பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு தாக்கம் செலுத்தியுள்ளது. "வீடு, நீர், மின்சாரம், வாயு மற்றும் வேறு எரிபொருட்கள்" ஆகிய தொகுதியில் சிறிய வீழ்ச்சியை வெளிப்படுத்துவதற்குக் காரணம் **L.P** வாயுவிற்கான விலை குறைவடைந்தமையாகும்.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அறிவித்து தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர சதரசிங்க அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் 2015 நவம்பர் மாதத்திற்கான வருடாந்த பணவீக்க வீதம் 4.8% ஆகக் கணிக்கப் பட்டுள்ளதாகவும் 2015 ஒக்டோபர் மாதத்திற்காக அந்தப் பெறுமதி 3.0% எனப் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தொலைபேசி இலக்கம் : 011-2147001 / 011-2147020